**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**சாட்சிகளின் வாக்குமூலம்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**
**நாள்: 19.01.2026**
**அரசு தரப்பு சாட்சி** : 26 (LW1)

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வளர்மதி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A1 to A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. A6, A7 ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது கீழகாக்காகுளத்தில் வசித்து கூலி தொழில் செய்து வருகின்றேன். இடையில் நான் கூலி வேலை செய்வதற்காக வெளிநாட்டிற்கு சென்றுவிட்டேன். சிறிது நாட்களுக்கு முன்புதான் திரும்ப கிராமத்திற்கு வந்தேன். இந்த வழக்கில் இறந்துபோன கருப்பையா எனது கணவர் ஆவார். எதிரிகள் ரமேஷ்குமார், சுரேஷ்குமார், ராஜ்குமார், கார்த்திகைசாமி, சரத்குமார் ஆகியோரை எனக்குத் தெரியும். ஆஜர் இரு எதிரிகளான ரஞ்சித் மற்றும் பெரியசாமி ஆகியோரையும் எனக்குத் தெரியும்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.19 17:05:02 +0530

எனக்கு இரண்டு பெண் குழந்தைகள், இருவரும் அபிராமம் முஸ்லீம் மேல்நிலை பள்ளியில் படித்து வருகிறார்கள். நாங்கள் எங்களது சொந்த ஊரில் சொந்தமாக வீடுகட்டி வந்தோம். கடந்த 29.07.2021ம் தேதி நாங்கள் புதிதாக கட்டி வந்த வீட்டிற்கு செங்கல் இறக்குவதற்காக எனது கணவரும், தங்கபாண்டியன் என்பவரும் வீரசோழன் கிராமத்தில் உள்ள செங்கல் சூளையில் அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வந்தார்கள். மாலை 06.30 மணியளவில் நான் எனது ஆடுகளை மேய்த்துவிட்டு எனது வீட்டிற்கு அருகில் வந்தபோது, எனது கணவரும் மேற்படி தங்கபாண்டியனும் என்னை எனது ஊர் பிள்ளையார்கோவில் அருகில் பார்த்து, கீழநரியன் குளத்தில் உள்ள கனிராஜசேகரிடம் ஜல்லி அடிப்பதற்காக அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வருவதாக சொல்லிவிட்டு இருவரும் ஆளுக்கொரு பைக்கில் சென்றார்கள். மேற்படி சாட்சி தங்கபாண்டியனின் உடன்பிறந்த சகோதரர்தான் கனிராஜசேகர் ஆவார்.

இரவு 08.00 மணிக்கு நான் கனிராஜசேகருக்கு போன் செய்து, என் கணவர் இன்னும் திரும்ப வீட்டிற்கு வரவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் எனது கணவர் தனது வீட்டில் இருப்பதாகவும், அவர் குடித்திருந்ததால், தற்போது போக வேண்டாம் என்று சொல்லி தடுத்து வைத்திருப்பதாகவும் ஆனால் என் கணவர் கிளம்புவதற்கு தயாராகி வருவதாகவும் சொன்னார். நான் அவரை அனுப்ப வேண்டாம், இரவு தங்கவைத்து காலையில் அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டேன். பின் நானும் எனது மகள்களும் தூங்கிவிட்டோம்.

மறுநாள் அதிகாலை 05.30 மணிக்கு கனிராஜசேகரின் தம்பி சௌந்தர்ராஜன் எனக்கு போன் செய்து, கருப்பையா எங்கே என்று கேட்டார். நான் அதற்கு "உங்கள் வீட்டிற்குத்தானே ஜல்லி அட்வான்ஸ் கொடுக்க வந்தார்" என்று சொன்னேன். அதற்கு அவர் தான் சாயல்குடியில் இருப்பதாகவும், தனது வீட்டிற்கு போன் செய்து கேட்டுவிட்டு பின்னர் என்னை தொடர்பு கொள்வதாகவும் சொல்லி போனை வைத்துவிட்டார். பின்னர் காலை 06.30



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.19 17:05:06 +0530

மணிக்கு சௌந்தரராஜன் எனக்கு போன் செய்து, என் கணவர் இரவே அங்கிருந்து கிளம்பிவிட்டதாக சொன்னார். அதனால் நான் பதறியடித்து, நானும் எனது இளையமகள் சந்தியாவும் கீழநரியன் கிராமத்திற்கு தேடி போனாம். போகும் வழியில் அந்த ஊர் பஸ் ஸ்டாப்பின் அருகில் என் கணவரின் இருசக்கர வாகனம் முன்பகுதி உடைந்து இரத்தக்கரையுடன் கிடந்ததை பார்த்தேன். அருகில் நாங்கள் தேடி பார்த்த போது என் கணவர் பக்கத்தில் இருந்த பஸ் ஸ்டாப்பின் கிழக்கில் உள்ள தண்ணீர் செல்லும் துாம்பின் அருகில் என் கணவர் உடலில் காயங்களுடன் இறந்துகிடந்தார். உடனே எனது மகள் எனது மாமனார் முத்துராமன் மற்றும் எனது அண்ணன் முனியராஜ் ஆகியோருக்கு தகவல் சொன்னார். தகவலை கேட்டு எனது மாமனார் முத்துராமன் மற்றும் அண்ணன் முனியராஜ் ஆகியோர்கள், எங்கள் ஊரை சேர்ந்த முத்தையா, கோபாலகிருஷ்ணன், கார்த்திகைசாமி, முத்துபாண்டி மற்றும் ஒருவர் வந்தார்கள். ஊர்க்காரர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். எதிரிகள் தான் கொலை செய்திருப்பார்கள் என்று நான்தான் போலிசாரிடம் சொன்னேன்.

ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்பு எங்கள் ஊரை சேர்ந்த காளீஸ்வரி என்பவரை கீழநரியனை சேர்ந்த ரமேஷ்குமார் கையை பிடித்து இழுத்து பிரச்சனை செய்தார் அதனால் எங்கள் ஊரை சேர்ந்த பசங்க அவரை அடித்து கண்டித்து அனுப்பிவைத்தார்கள். எனது கணவரும் அவர்களுடன் இருந்தார். ஆனால் அடிக்கவில்லை. ரமேஷ்குமார் அங்கிருந்து செல்லும்போது இந்த ஊரை சேர்ந்த யாரையாவது கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு சென்றார்.

அதன்பின் எங்கள் ஊரை சேர்ந்த ஸ்டாலின், முத்துராஜா, கார்த்திகைசாமி, ரமேஷ்குமார் ஆகிய 4 பசங்க வரும் போது, அவர்களை வழிமறித்து வாளால் வெட்ட சென்றார்கள். அவர்கள் தப்பித்து வந்துவிட்டார்கள். வெட்ட சென்றவர்கள் ஓடிவிட்டார்கள். இந்த பிரச்சனை நடந்து



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.19 17:05:10 +0530

கொண்டிருந்தபோதுதான், என் கணவர் அந்த ஊருக்கு பயந்து பயந்து போய்வந்து கொண்டிருந்தார்.

என் கணவர் தன்னை ரமேஷ்குமார், அவரது அண்ணன் சுரேஷ்குமார், கார்த்திகைசாமி ஆகியோர் போகும்போது, வரும்போது பார்த்து முறைப்பதாக என்னிடம் சொன்னார். நான் என் கணவருக்கு தைரியம் சொல்லி, அவரை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தேன்.

என் கணவரை மொத்தம் 12 நபர்கள் சேர்ந்து அடித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக 30.07.2021ம் தேதி காலை 09.30 மணிக்கு மண்டலமாணிக்கம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல போலிஸ்காரர் எழுதிக்கொண்டார். நான் அதை படித்துப்பார்த்து சரியாக இருந்தது, கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.15** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் வாக்குமூலத்தில் சாட்சிகள் முத்துராஜ் மற்றும் முனியராஜ் ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது முதன்மை விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் நான் கொடுத்த புகார் வாக்குமூலம் மற்றும் போலிஸ் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் போலிசாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தை முழுவதுமாக படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் எனது கணவரை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் மாலை 06.30 மணிக்கு பார்த்தேன். அவ்வாறு நான் பார்த்தபோது, என் கணவரும், தங்கபாண்டியனும் மது அருந்தியிருந்தார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் மது அருந்தவில்லை.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.19 17:05:14 +0530

எனது கணவரும், தங்கபாண்டியனும் மது அருந்தியிருந்ததாக எனது புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தங்கபாண்டியன் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்குத் தெரியாது. கனிராஜசேகர் எப்போது எனக்கு போன் செய்தார் என்றால் 08.00 மணிக்கு போன் செய்தார். அப்போது என் கணவர் குடிபோதையில் இருந்ததாகவும், அவரை இருக்கச்சொன்னால், இருக்கமாட்டேன் கிளம்புகிறார் என்று என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். ஆனால் அதையும் மீறி என் கணவர் அன்று இரவே அங்கிருந்து கிளம்பிவிட்டார் என்றால் சரிதான். என் கணவர் அன்று இரவே அங்கிருந்து கிளம்பிவிட்டார் என்ற விவரம் தெரிந்து நான் முதலில் எங்கள் ஊரில்தான் தேடிப்பார்த்தேன் என்றால் சரிதான். நான் அவரை தேடி காலை 06.00 மணிக்கு வீட்டில் இருந்து கிளம்பினேன்.

சௌந்தர்ராஜன் எனக்கு எத்தனை மணிக்கு எந்த எண்ணில் இருந்து போன் செய்தார் என்றால் போன் எண் எனக்குத் தெரியாது. காலை 05.30 மணிக்கு போன் செய்தார். சௌந்தர்ராஜன் ஏன் காலை 05.30 மணிக்கு எனக்கு போன் செய்தார் என்றால் அதை அவரிடம் தான் கேட்கவேண்டும். அவர் என்னிடம் என்ன கேட்டார் என்றால் அண்ணன் எங்கே என கேட்டார், நான் அதற்கு உங்கள் வீட்டிற்குதான் வந்துள்ளார் என்று சொன்னேன். பின் அவர் தான் சாயல்குடியில் இருப்பதாகவும், வீட்டில் கேட்டுவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார். நான் எனது கணவரின் செல்போன் எண்ணிற்கு நான் போன் செய்து பார்த்தேனா என்றால் அவரது செல்போன் இரவே ஸ்விட்ச் ஆப் ஆகிவிட்டது.

முதல்நாள் இரவே செல்போன் ஸ்விட்ச் ஆப் ஆன நிலையில், நான் கனிராஜசேகரிடம் அவர் இருக்கிறாரா, சென்றுவிட்டாரா என்று போன் சென்று உறுதி செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அவர் எத்தனை மணிக்கு அங்கிருந்து கிளம்பினார் என்று நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சௌந்தர்ராஜன் எனக்கு மறுபடியும் போன் செய்து பஸ் ஸ்டாண்டில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.19 17:05:19 +0530

அண்ணன் பைக் போன்ற ஒன்று கிடைக்கிறது என்று சொன்னவுடன் நான் அங்கு போனேன். என்னுடன் எனது இளையமகள் சந்தியா வந்தார். எனக்கு இரு பெண்குழந்தைகள். என் இரு குழந்தைகளுடன்தான் நான் தேடி சென்றதாகதான் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு நான் யாருக்கு தகவல் சொன்னேன் என்றால் எனது மாமனார் முத்துராமன், முனியராஜ் ஆகியோருக்கு தகவல் சொன்னேன். கார்த்திகைசாமி, முத்தையா, முத்துப்பாண்டி, கோபாலகிருஷ்ணன் உட்பட 6 பேர் வந்தார்கள். மேற்படி நபர்கள் வந்தார்கள் என்ற விவரத்தை புகார் வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

எதிரிகளால் என் கணவருக்கு அச்சுறுத்தல் இருந்ததாகவோ, அவர்கள் ஏற்கனவே என் கணவருடன் தகராறு செய்தார்கள் என்பதாகவோ, போலிசில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காளீஸ்வரிக்கும் 1ம் எதிரி ரமேஷ்குமாருக்கும் எப்போது பிரச்சனை நடந்தது என்றால் எனக்கு சரியாக தெரியாது. என் கணவர் இறப்பதற்கு சுமார் 6 மாதம் முன்பு இருக்கலாம். அந்த பிரச்சனை சம்மந்தமாக காளீஸ்வரி புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போன்று காளீஸ்வரிக்கும் ரமேஷ்குமாரும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

எனது கணவரை 12 நபர்கள் அடித்துக்கொன்றதாக எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் கேள்விப்பட்டேன். கோபாலகிருஷ்ணன், கேசவன் ஆகியோர் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என் கணவர் சென்ற இருசக்கர வாகனத்தின் முன்பகுதி மட்டும் சேதம் ஆகியிருந்தது என்றால் சரிதான். என் கணவர் வீட்டில் இருந்து கிளம்பும்போது தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான்.

இந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.19 17:05:22 +0530

சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் எனது கணவரின் மரணம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு திரும்பி வரும் வழியில் கீழநரியன் பஸ் ஸ்டாப் கட்டிடத்தின் மீது மோதி அதனால் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

எனது கணவருடன் சென்ற தங்கபாண்டியனும், இந்த எதிரிகளும் கீழநரியன் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தங்கபாண்டியன் குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக, எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்பதாற்காக தங்கபாண்டியன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் என் கணவரின் மரணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.19 17:05:26 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .